# ஜோதிடம் எனும் கடல்!

நம்பிக்கை, இல்லை, பொய் எனும் நிலைபாடுகளுக்கு இடையில், இந்த ஜோதிடம் வாழ்ந்து கொண்டுதான் உள்ளது. அவர் சரியாகக் கணிக்கிறார், இவர் சொன்னால் பலிக்கிறது. இவையே நிலை. நிற்க, தற்போது, திருமண வரன் தேடலில் முதன்மையாய் நிற்பது பொருத்தம் பார்ப்பது. 12 ஆக இருந்து தற்போது, 10 ஆகிவிட்டது. ஏழுக்கு மேல் இருந்தால் சிறப்பு எனவாய் பேசுகின்றனர். இந்த பொருத்தம் என்பது என்ன? பொருந்தி வாழ்தலுக்கான தேடல். ரஜ்ஜு, வேதை, ஸ்திரீ தீர்க்கம், ராசி, ராசி யதிபதி, யோனி எனவாய். ஒவ்வொன்றும் ஒரு நிலைக்கலன். அதன் அடிப்படையில் தீர்மானிப்பர். அதைத் தாண்டி, இரண்டில் ராகு, எட்டில் கேது இருந்தால், அதே நிலையில்தான் இணையைத் தேடவேண்டும். இது போல், இன்னும் சில உலாவிக் கொண்டுள்ளன. நம்மிடையே வந்த பழகிவந்த முறைதாண்டி, பி.வி. ராமன், முதலாய், சிலர் அவர்களது ஆய்வுக்கு உட்பட்டு வெளிப்படுத்தி யுள்ளனர். நட்டத்திர சாரம் (ஒரு கிரகம் உட்காந்திருக்கும் நட்சத்திர கால்), பார்வை, இவையும் ஒரு காரணியாக இருக்கும்.

பழங்காலத்தில் யாருக்கும் இந்த பொருத்தம் பார்க்கும் நிலை இல்லாத காரணம், அன்று பெரும்பாலும் நெருங்கிய உறவுக்குள்ளேயே திருமணம், அத்தை, மாமன் பிள்ளைகள் என. இன்னொன்று, இன்று அவர்களது, எதிர்பார்ப்புக்கு, வசதியோ வேலையோ இல்லாத போது, இந்தப் பொருத்தத்தைக் காரணமாக்குவர். எந்தையார் சொல்வார்கள், பிரம்மரிஷி வசிஷ்டர் குறித்த நாளில் இராமன் பட்டாபிஷேகம் நடை பெறவில்லை. என்னுடைய பாட்டனாருக்கு, ஜோதிடக்கலையில் ஈடுபாடு இருந்து, எந்தைக்கும் இருந்து, எனக்கும் தொற்றிக் கொண்டு விட்டது. 15 வது வயதில் கைரேகை ஜோதிடம் கற்க முனைந்த போது, எந்தையார் தடுத்தார். காரணம், பல சமயங்களில் நமது நேரத்தை மிகுதிக்கண் விழுங்கும் என்பதே!. பின்னாளில், பணியில், அந்த இறுக்கத்திலும் சொல்லும் சூழல் உருவாகியுள்ளது. மனத்துயர் களையத்தான் வருகின்றனர்

எனும் போது, தவிர்க்க இயலாது. என்னுடைய மேலதிகாரியாக இருந்தவர், சொல்லுவார் என்னைப் பற்றி, “சார் பாவம், அவருக்கு எப்போதும் கூட்டம். கவிஞர், ஜோதிடம் கேட்க வருவோர், சுங்க இல்ல முகவர் பணியாளர், ஐயம் தீர்க்க, அப்புறம், அவரது, வேலை” இப்படி யென.

ஒரு மனத்தாங்கலுடன் தான் அனைவருமே ஜோதிடம் கேட்கச் செல்வோம். ஆகையால் யாருக்கும் நான் மறுப்புச் சொல்வதில்லை. கடவுள் நம்மூலம் அவருக்கு தேவையானதை அளிப்பதாவே கருதுவேன். இன்றும் கூட அப்பணி தொடர்கிறது. எந்தையார், அமரர் ஓ.வி. அளகேசனுக்குக் கூட ஜோதிடம் கூறியுள்ளாராம். தேர்தல், வெற்றி தோல்வி குறித்து. வேடிக்கை என்னவென்றால், எங்கள் பெரியபாட்டனார், பெரியப்பா, ஒரு சிற்றப்பா ஆகியவர்களுக்கு கடவுள் நம்பிக்கையே கிடையாது.

போகட்டும், விஷயத்துக்கு வருவோம். என்னுடைய மூத்த மகனுக்கு வரன் தேடிய காலத்தில், ஜாதகத்தில் கட்டங்களைப் பார்த்த போது, பல் ஜாதகங்களில், ஆட்சி, உச்சமென கிரஹங்கள் இருந்தாலும், அவை நல்ல இடங்களில் இருக்க வில்லை. தனம், வாக்கு, குடும்பம், பூர்வ புண்ணியம், பாக்கியம் முதலான இடங்களில். ஒரு ஜாதகத்தில், இவை நன்றாக இருந்தால்தான், வாழ்க்கை செம்மையாக அமையும். எந்தையார் எப்போதும் கூறுவார். பொருத்தம் இரண்டாம் நிலைதான். சண்டை சச்சரவுகள் குறையும், அது இல்லையென்றால், மகிழ்ச்சி ஏது. ஐயன் வள்ளுவன் கடைசிக் குறள் பொருளற்றதாகிவிடும் அல்லவா?

ஜோதிடத்தில் மிக வல்லவராகவும், அன்பிற்கினியராகவும் இருந்த என்னைவிட பத்தாண்டுகள் அகவையில் மூத்த நண்பர், BEML லில், பணிசெய்த நண்பர் அரங்கநாதனிடம் வினவினேன் காரணம். அவர் சொன்னார், இதன், 5,6 ஆண்டுகள் முன்பே, தனது, இளைய மகளுக்கு வரன் தேடிய போதே, இந்நிலையை கண்டேன் என்றார். அதாவது, ஆட்சி, உச்சம் நல்ல இடத்தில் இல்லாது போவது. அவர் கணித்த காரணம், இன்றைய பெற்றோரின் மன

அழுத்தம், அவர்கள் பிள்ளைகளுக்கு, படிப்பு, பணி, பணம் என்று புகட்டுதலே என்றார்.

எனவே, பொருத்தம் என்பதில், முற்றிலும் முழுகாமல், ஜாதக அமைப்பையும் ஒருவாறு அலசக் கேட்டுக்கொள்கிறேன். இயற்கையாகவோ, இறையருளாலோ, எனக்குச் சில புதிய பார்வைகளும், கணிக்கும் வல்லமையும் கிடைத்தன. யாருக்கேனும், ஆட்சி, உச்சம் என்பதில், ஐயம் இருப்பின், பஞ்சாங்கத்தில் காணுங்கள்.

- கு.ப. அசோகன்

--0--